விளையாட்டுப் போட்டிகளை நடத்திக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பாரம்பரிய விளையாட்டான கபடி குறித்து எழுப்பிய வினாவிற்கு முக்கியத்துவம் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மேலும் நல்ல முறையில் முன்னேற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெற்ற மாநிலங்களில், நமது தமிழகம் இந்தியாவிலேயே 8-வது இடத்தில் இருந்தது. தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆசியோடு தமிழகம் இன்றைக்கு மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், முதலிடத்திற்கு வருவதற்கு இந்த அரசு அனைத்து விதங்களிலும் நடவடிக்கைகள் எடுத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் - விடைகள் நேரம் முடிவுற்றது

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) நான்தான் சிறப்புக் கவன ஈர்ப்பாக இன்றைக்கு எடுத்துக்கொள்ள இருக்கிறேனே? (குறுக்கீடு) வேறு பிரச்சினையா?

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல், நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் திருச்சி ஆகிய 13 மாவட்டங்களில் விளைநிலங்கள் வழியாக உயரழுத்த மின்கோபுரம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையும் இன்றைக்குச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். கஜா புயல் பாதிப்பு குறித்து எடுத்துக்கொண்ட பிறகு, அதை எடுத்துக்கொள்கிறேன்.